செ.வெ.எண்.19 நாள்:10.05.2017

**திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டம் குட்டம் கிராமத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 86 பயனாளிகளுக்கு ரூ.33.23 லட்சம் மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டம் குட்டம் கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சிறப்பு மனுநீதி நாள் முகாம் இன்று (10.05.2017) நடைபெற்றது. இம்முகாமில் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐ.எஸ்.இன்பத்துரை அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் 86 பயனாளிகளுக்கு ரூ.33.23 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டத்தில் பல்வேறு கடலோர கிராமங்களில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிகளும் மீனவர்கள் பயன்பெறும் வகையில் வலை கூடம் அமைக்கும் பணிகளும் ரூ92 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. மேலும் கடலோர கிராம பகுதிகளில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு கூட்டு குடிநீர் திட்டங்கள் ரூ.68 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு சோதனை அடிப்படையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. விரைவில் இப்பகுதி கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். குட்டம் கிராமத்தில் நடைபெறும் மனுநீதி நாளையொட்டி ஏற்கனவே இங்கு பெறப்பட்ட 98 மனுக்கள் மீது வட்டாட்சியர் மூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு 50 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இன்று இவர்களுக்கு பயன்கள் வழங்கப்படுகிறது. உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. திருமண உதவித்தொகை, இயற்கை மரண உதவித்தொகை, விபத்து மரண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை உள்ளிட்டவைகளும் வழங்கப்படுகிறது. இன்று வருவாய் துறையின் சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் 21 நபர்களுக்கு 2.23 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மேலும் நான்கு நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான உத்தரவு வழங்கப்படுகிறது. இந்தியன் ஓவர்சிஸ் வங்கியின் மூலம் 3 சுயஉதவிக் குழுவினர்க்கு ரூ.9.50 லட்சம் மதிப்பிலான கடனுதவி வழங்கப்படுகிறது. கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் கோழி பண்ணை அமைக்க இரண்டு நபர்களுக்கு தலா 10.75 லட்சம் கடனுதவி மானியத்துடன் வழங்கப்படுகிறது. மேலும் மானிய விலையில் உலர்தீவனங்கள் 60 பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. வேளாண்மை துறையின் மூலம் இரண்டு நபர்களுக்கு மொபைல் ஸ்பிரிங்லர் 75 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது. மேலும் தமிழக அரசு ஏழை எளிய மக்களுக்காக எண்ணில் அடங்கா பல

திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குட்டம் கிராமத்தில் மட்டும் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் பொது நிதி உட்பட பல்வேறு திட்டங்களின் கீழ் சுமார் ரூ 1 கோடி மதிப்பிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. குடும்ப அட்டை (ஸ்மார்ட் கார்டு) வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இராதாபுரம் வட்டத்தில் மொத்தம் 81,691 குடும்ப அட்டைகள் உள்ளது. இதில் 16,415 ஸ்மார்ட் கார்டுகள் வரப்பெற்று இதுவரை 11,100 ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளது. குட்டம் கிராமத்தில் உள்ள 354 குடும்ப அட்டைகளுக்கும் ஸ்மார்ட் கார்டுகள் விரைவில் வழங்கப்படும் இங்கு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடன் நடவடிக்கை மேற்கொண்டு நிவாரண உதவிகளை விரைவில் வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.விஷ்ணு.இ.ஆ.ப., சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி. விஜயலெட்சுமி, இணை இயக்குநர் வேளாண்மைத் துறை திரு.கனகராஜ், முன்னோடி வங்கி மேலாளர் திரு.அழகர்சாமி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.நிர்மலா, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.ராம்கணேஷ், மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் திருமதி. சாந்தி குளோரி எமரால்டு, இராதாபுரம் வட்டாட்சியர் திரு.ரவிகுமார், சமூக பாதுகாப்பு வட்டாட்சியர் திரு.புகாரி மற்றும் அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.